7th March 1968] [Mr. Chairman]

7 Thiru D. Santosham.
8 Thiru N. V. Natarajan.
9 Thiru R. M. Seshadri.

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, nine, I hereby declare them to have been duly elected to the Committee of Privileges. The Deputy Chairman is ex-officio a Member.

Under rule 156 (4) of the Council Rules, I have nominated Thiru K. Rajaram to be the Chairman of the Committee.

III. CALLING ATTENTION TO HARDSHIP CAUSED TO AGRICULTURISTS AND BUSINESSMEN DUE TO LEVY OF MULTIPOINT SALES TAX ON PROCUREMENT AND SALES OF CHILLIES IN MADURAI DISTRICT.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரமான பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்— 3-50 p.m.

மதுரை மாவட்டத்தில் மிளகாய் சேகரிப்பு, மிளகாய் விற்பனை ஆகிய வற்றின் மேல் பலமுனை வணிக வரி விதிக்கப்படுவதால் விவசாயிகளுக்கும் மற்றும் வியாபாரிகளுக்கும் ஏற்பட்டுள்ள துன்பம்.

விற்பனை வரி என்ற பெயரால் வரி வசூலிக்கப்படுகிறது. ஆனால் சர்சார்ஜ் என்று கொள்முதல் செய்வதற்கும் வரி போடப்படுகிறது. சர்சார்ஜ் இருக்கக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன்.

*** THE HON. THIRU K. A. MATHIALAGAN :** In the call attention notice it is stated that in Theni in Madurai District and other places sales tax is being levied on chillies both at the point of purchase as well as sale in a manner to affect agriculturists, dealers and consumers. In Chandramouli *vs.* State of Madras (18 S.T.C. 325), the Madras High Court held that when an agent transferred goods received for sale on commission basis to himself the agent acted in two different capacities, namely. as an agent of a principal and also as a purchaser for his own business. Relying on his decision and the decision of the High Court in State Of Madras *vs.* Tiruchengode Co-operative Marketing Society Limited (16 S.T.C. 760) the Board of Revenue took the view that when the agent of an agriculturist principal transfers on behalf of the principal agricultural produce to himself (agent) in the capacity of a dealer, the transaction is liable to tax under the Madras General Sales Tax Act, 1959, and issued instructions in May 1966 to follow the aforesaid judgments to make assessments or reopen assessments as the case may be. Accordingly, for the year 1961-62, a tax demand for Rs. 67,454 has been raised in Madurai district. The collection of this amount has, however, been stayed under instructions from Government. Action was taken by the Commercial Taxes authorities to make assessment of such transactions for 1962-63 as the assessments would become time barred after 31st March 1968. The Government examined the liability of the transactions in question and have since issued clarification in G.O. Ms. No. 281, Revenue, dated the 12th February 1968, that if the agriculturist principal sells his own produce to the

agent only as a surplus and not in the course of business, then the transaction of the agent on behalf of the principal will not involve a sale, and that, on the other hand, if the agriculturist principal does not sell the agricultural produce grown by himself but only buys and sells the produce from other agriculturists, the sale of such agricultural produce by the principal to the agent will be a sale and consequently the sale by the agent on behalf of the principal to the agent himself as a dealer will be a sale.

The Board of Revenue (Commercial Taxes) has communicated the above orders to the subordinate authorities on 26th February 1968 with necessary instructions. The implementation of the orders will put an end to the instances of the kind mentioned in the Call attention notice.

IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1968-69—*cont.*

Mr. CHAIRMAN : As usual there is a large number of Members to speak, today being the last day. I would request hon. Members to confine their speeches to ten or fifteen minutes. This bell complains that it is not being employed. I propose to employ it today. (Laughter.) Thiru Ponnappa Naidu will now speak.

திரு. ஏ. பொன்னப்ப நாயுடு : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையின்மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகின்றேன். தேர்தலுக்கு முன்பு அவர்கள் வசதிகளைப் பெருக்குவோம், வரிகளைக் குறைப்போம் என்றெல்லாம் பொதுமக்களிடம் சொல்லி வந்தார்கள். ஆனால் இன்றைய நடைமுறையில் பார்த்தால், எல்லா பகுதிகளிலும் வசதியைக் குறைத்து வரிகளைக் கூட்டியிருக்கிறார்கள். வெள்ளையர்கள் ஆண்ட காலத்திலும் கிராம மக்களுக்குத்தான் வரி என்று ஆரம்பித்தார்கள். அப்போதெல்லாம் பொதுவாக நகர மக்களுக்கு அரசாங்கம் வரி போடுவது கிடையாது. கிராமங்களில் உள்ள மக்களுக்குத் தான் நிலவரி, பூவாசு என்று பல பகுதிகளாக வரி போட்டார்கள். அதற்குப் பின்னால் திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் நமது மாநிலத்தின் முதலமைச்சராக பதவியேற்ற போது, அன்னிய அரசாங்கம் கிராம மக்களுக்கே, விவசாய மக்களுக்கே எல்லா வரிகளையும் விதித்திருக்கிறார்கள், நகர மக்களுக்கு யாதொரு வரியும் விதிக்கப்படவில்லை. ஆகவே கிராம மக்களுக்கு இனிமேல் வரி விதிக்கக் கூடாது என்ற கருத்தில், எல்லோருக்கும் வரி இருக்க வேண்டுமென்று விற்பனை வரியைக் கொண்டு வந்தார்கள். அந்த விற்பனை வரியும் கூட கிராம மக்கள் தான், பெருவாரியாக வாங்கிச் சாப்பிடுகின்ற அந்த மக்கள் தான் கட்டுகிறார்கள். காந்தியடிகள் சொன்னது போல், உப்பு வரியை முந்தைய காங்கிரசு அரசாங்கம் எடுத்தது. நில வரியையும் எடுத்துவிட வேண்டும், நஞ்செய், புஞ்செய் நிலங்களுக்கு நிலவரியை நீக்கிவிட வேண்டும் என்று காந்தியடிகள் ஆசைப்பட்டார்கள். அதன்படி தான், நஞ்செய், புஞ்செய் நிலங்களுக்கு வரியை நீக்கிவிட வேண்டும் என்று இந்த அவையிலும், பேரவையிலும் முன்பிருந்த முதலமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு வைத்தார்கள். ஆனால், இந்த அரசாங்கம் வந்த பிறகு, புஞ்செய் நிலங்களுக்கு மட்டும் இப்போது வரி நீக்கப்படும், அதிகமான வரி கொடுக்க வேண்டிய நஞ்சை நிலங்களுக்கு அடுத்தபடி பின்னால் நிலவரி நீக்கப்படும் என்றார்கள். இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால், நஞ்செய் நிலங்களுக்கு நிலவரி நீக்கப்பட்டிருக்கிறதா என்று கவனித்தால், எடுக்கப்படவில்லை. எங்கள் கிராமத்தில்